Representation from Harijans of Kilkuthur.

* 713 *Q.*—THIRU K. SAHADEVA GANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) Whether any representation has been received by the Hon. Minister from the inhabitants of the Harijan Colony at Kilkuthur Colony in Tiruvannamalai in North Arcot district about 2—12—1969 ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) கோரிக்கை எதுவும் அரசிடம் கிடைக்கப்பெறவில்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு மனை எப்பொழுது வழங்கப்படும் என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மனுக்களே வரவில்லை என்று கூறும்பொழுது நடவடிக்கை பற்றி எப்படிப் பரிசீலனை செய்ய முடியும் ?

திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவரவர்களே, மனுக்கள் வராவிட்டாலும் பட்டா வழங்கி மூன்று வருஷங்களாகின்றன. எனவே, மீண்டும் பரிசீலனை செய்து எப்பொழுது மனைகள் கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எந்தெந்த இடத்திலே பட்டாக்கள் வழங்கி நிலங்கள் கொடுக்கப்பட்டன என்று அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட நல அதிகாரிகள் செயற் குறிப்பு அனுப்புகிறார்கள். அதிலே இவைகள் இடம் பெற்றால் கவனிக்கலாம். மற்றபடி அவர்கள் கூறுகின்ற இடத்திலுள்ள அரிசன மக்கள் மத்தியிலிருந்து எந்தவிதமான விண்ணப்பமும் வரவில்லை என்றுதான் கூறினேன்.

பரும்பூர் அரிசனங்களுக்கு வீட்டு மனை.

* 714 வினா—திரு எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுக்கா, ஒட்டப்பிடாரம் சப் தாலுக்காவைச் சேர்ந்த பரும்பூர் அரிசன மக்கள் வீட்டு மனை கோரி, 27-2-1960-ல் முதல் அமைச்சர், சலெக்டர், அரிசன நல அமைச்சர், அரிசன நல அதிகாரி இவர்களுக்கு எல்லாம் மனு அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. துரைராஜ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது அரசாங்கத்தின் பரிசீலயில் இருக்கிறது என்று கூறினார்கள். அதை விரைவாகப் பரிசீலித்து, அந்தக் கிராம மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய விரைவான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.